**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 209/2006**

**வாதி தரப்பு சாட்சி–1 அப்துல அஜீஸ் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 28.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>18 முதல் 25 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>**

1) தாவா சொத்தின் சரியான சர்வே எண் 598 என்பதில் எனக்கு மாற்றுக் கருத்து உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண் 598ன் மொத்த விஸ்தீரணம் 6 ஏக்கர் 99 செண்ட் என்றால் சரிதான். சர்வே எண் 598ற்கு அழகர்சாமி, ராமன் குடும்பத்திற்கு பட்டா ஏற்பட்டுள்ளதா என்றால், தவறுதலாக ஏற்பட்டுள்ளது. அழகர் சாமி வகையறா பெயரில் பட்டா ஏற்பட்டவிபரம் எப்போது தெரியும் என்றால், அ.வ.எண்.225/1986 வழக்கில் என்னை விசாரணை செய்தபோதுதான் தெரியவந்தது. மேற்படி பட்டாவை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால், மனு கொடுத்தேன். நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதாக சொல்லிவிட்டனர். பின்னிட்டு நடவடிக்கை எடுத்தேனா என்றால், பலமுறை மனு கொடுத்தேன். அப்போதும் அவ்வாறே சொன்னதால் விட்டுவிட்டேன். சர்வே எண் 598 அழகர்சாமி, ராமர் இருவருக்கு மட்டும்தான் பாத்தியம் என்றால் சரியல்ல.

2) சர்வே எண் 598ல் அழகர்சாமி, ராமர் இருவரும் 3ம் நபர்களுக்கு விற்பனை செய்துள்ள விபரம் தெரியுமா என்றால், கடைசியாகத்தான் வில்லங்கசான்று போட்டு பார்த்த போது தெரியவந்தது. அவ்வாறு விற்பனை செய்த விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால், சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பு தெரியும். தாவா சொத்து எனது அனுபவத்தில் இருந்திருந்தால், அழகர், ராமரால் விற்பனை செய்திருக்க முடியாது என்றால் சரியல்ல. என்னிடம்தான் அனுபவம் உள்ளது, தவறாக விற்பனை செய்துள்ளனர். பொதுவாக ஒரு நபர் பெயரில் ஆவணங்கள் எதுவும் இல்லாமல் நிலத்தை விற்பனை செய்ய முடியாது

என்றால் சரிதான். சர்வே எண் 598ல் 28.06.1994ல் ராமன், பெரியசாமி இருவரும் பெருமாள் என்பவருக்கு கிரையம் செய்த விபரம் தெரியுமா என்றால், வில்லங்க சான்று பார்த்த பின்னிட்டுத்தான் தெரியும்.

3) அதே போன்று சர்வே எண் 598ல் 20.01.1999ல் அழகர், ராமன், காமாட்சி, ரெங்கசாமி ஆகியோர் ராமசாமிக்கு சர்வே எண் 598ல் 87½ செண்ட் விற்பனை செய்த விபரம் தெரியுமா என்றால், பின்னிட்டுத்தான் தெரியும். அது சம்பந்தமாக சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆட்சேபனை மனு கொடுத்துள்ளேன். 12.08.2025ல் சர்வே எண் 598ல் ஒரு பகுதியை காமாட்சி, நாகேஸ்வரன், செல்லத்துரை வகையறா, கிருஷ்ணமூர்த்தி, கார்த்திக் இருவருக்கும் விற்பனை செய்த விபரம் தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது. ராமர், அழகர் இருவர் பெயரிலும் சர்வே எண் 598க்கு உரிய ஆவணங்கள் இருந்ததால்தான் அவர்களால் மேற்படி கிரையங்களை ஏற்படுத்த முடிந்தது என்றால் சரியல்ல. தவறான ஆவணங்களை வைத்து அனுபவமே இல்லாமல் விற்பனை செய்துள்ளார்கள்.

4) மேற்படி ஆவணங்கள் ஏற்பட்ட போது ஆட்சேபனை செய்தேனா என்றால், ஆட்சேபனை மனு கொடுத்துள்ளேன். ஆட்சேபனை மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. மேற்படி கிரையம் பெற்ற நபர்களை ஏன் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால், இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது பெறப்பட்ட கிரையம் செல்லத்தக்கதல்ல என்பதாலும், அவ்வாறு கிரையம் பெற்ற யாரும் தாவா சொத்தின் அனுபவத்திற்கு வராததாலும் அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை. 1961ம் வருடத்திற்கு பின்னிட்டு தாவா சொத்திற்கு தீர்வை செலுத்தினேனா என்றால் 1965 ம் வருடம் வரை எனது தகப்பனார் செலுத்தினார். அதன் பின்னிட்டு பட்டா மாறிய விபரத்தை அவர் கவனிக்காமல் விட்டுவிட்டார். நான் தாக்கல் செய்துள்ள செட்டில்மென்ட் ரிஜிஸ்டரில் (வா.சா.ஆ.7) சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, பைமாஸ்

எண் உள்ளது. தாவா சொத்தை சாகுபடி செய்வதற்கான அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால், நாங்கள்தான் சாகுபடி செய்து வருகிறோம். ஆனால் பட்டா மாறியுள்ளதால் அடங்கல் தாக்கல் செய்யவில்லை.

5) கடந்த 60 வருடங்களாக தாவா சொத்தை பிரதிவாதிகள்தான் சாகுபடி செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேல்முறையீட்டு எண்79/1995ல் தாக்கல் செய்த இடைநிலை மனு எண் 56/2003 நிபந்தனையாக 03.03.2004ம் தேதிக்குள் ரூ.1000/- செலுத்த வேண்டும் என பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் பணம் செலுத்தியதற்கான ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் செலுத்திவிட்டேன். பிரதிவாதிகளிடம் இருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் அவர்களுக்கு எதிராக பொய்யாக சங்கதிகளை கொண்டு வழக்கினை தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**